# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.07.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *பல்கலைக்கழகங்கள் (திருத்தம்)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கல்வி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் இப்பிரிவின் சட்டப்பயனானது, குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பல்கலைக்கழகங்களைத் தாபிப்பதற்காக ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 7*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 9*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, "ஆளுகின்ற அதிகாரசபை", "உயர்கல்வி நிறுவனம்" மற்றும் "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்னும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை மாற்றீடுசெய்வதாகும்.

*ச.வ.- ஓ. 8/2021*

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தில் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம், அதன் 23 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பல்கலைக் கழகங்களைத் தாபித்தல்*

23அ.(1) அமைச்சர், ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், கட்டளையொன்றின் மூலம், (இதனகத்துப்பின்னர் "குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான கட்டளையொன்றுக்கான பல்கலைக்கழகமொன்று" எனக் குறிப்பீடு செய்யப்படும்)-

(அ) பிரிவுகள் 21, 22, 23, 24, 24அ மற்றும் 25 என்பவற்றிற் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களுள் எவற்றினதும் மாணவர்களாகவிராதவர்களுக்கு அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய எல்லாக் கற்றற் கிளைகளிலும் உயர்கல்வியை வழங்கும், மேம்படுத்தும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காகக் கூட்டிணைக்கப்பட்ட

குழுவொன்றாகவிருக்கவேண்டியதும், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டதாக விருக்கவேண்டியதுமான பல்கலைக்கழக மொன்றைத் தாபிக்கலாம்;

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தளிக்க லாம்; அத்துடன்

(இ) அத்தகைய பல்கலைக்கழகம் அமைந்திருக்க வேண்டிய அமைவிடத்தை அல்லது இடத்தைக் குறித்துரைக்கலாம்.

(2) அத்தகைய பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பு, தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பன கட்டளைச்சட்டத்தின்மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "திறந்த பல்கலைக்கழகக் கட்டளை, பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை, உயர் கற்றலுக்கான நிறுவனக் கட்டளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திறந்த பல்கலைக்கழகக் கட்டளை, குறிப்பிட்டவொரு நோக்கத் துக்கான பல்கலைக்கழகக் கட்டளை, பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை, உயர் கற்றலுக்கான நிறுவனக் கட்டளை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "23, 24" என்னும் எண்களுக்குப் பதிலாக, "23, 23அ, 24" என்னும் எண்களையும் எழுத்தையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "திறந்த பல்கலைக்கழகக் கட்டளை, பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை, அல்லது உயர் கற்றலுக்கான நிறுவனக் கட்டளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "திறந்த பல்கலைக்கழகக் கட்டளை, குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகக் கட்டளை, பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை அல்லது உயர் கற்றலுக்கான நிறுவனக் கட்டளை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "23, 24" என்னும் எண்களுக்குப் பதிலாக "23, 23அ, 24" என்னும் எண்களையும் எழுத்தையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "பல்கலைக்கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளரின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில், "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்கள் அக்காப்பு வாசகத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவு, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவு, "பல்கலைக்கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளருக்கு" மற்றும் "அப்பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளருக்கு" மற்றும் "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு, அதன் (6) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பல்கலைக் கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் செயலாளருக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் செயலாளருக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "பல்கலைக்கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் செயலாளருக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் செயலாளருக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவு, "பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகம், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகங்கள் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், உயர் கற்றலுக்கான நிலையம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகம், உயர் கற்றலுக்கான நிலையம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவு, "பிரிவுகள் 21, 22, 23, மற்றும் 24" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பிரிவுகள் 21, 22, 23, 23அ, மற்றும் 24" என்னும் சொற்களையும் எண்களையும் எழுத்தையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "ஆளுகின்ற அதிகாரசபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "ஆளுகின்ற அதிகாரசபை" என்பது,-

(i) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப்பல் கலைக்கழகத்தின் பேரவை என்று பொருளாகும்;

(ii) ஒரு திறந்த பல்கலைக்கழகம் தொடர்பாக, அத்திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவை என்று பொருளாகும்;

(iii) குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகம் தொடர்பாக, குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான அப்பல்கலைக்கழகத்தின் பேரவை என்று பொருளாகும்; அத்துடன்

(iv) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக, அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் முகாமைச் சபை என்று பொருளாகும்;";

(2) "உயர்கல்வி நிறுவனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "உயர்கல்வி நிறுவனம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக்கழகம், வளாகம், திறந்த பல்கலைக்கழகம், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது உயர்கற்றலுக்கான நிலையம் என்று பொருளாகும்;"; அத்துடன்

(3) "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது, -

(i) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப்பல் கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்று பொருளாகும்;

(ii) ஒரு திறந்த பல்கலைக்கழகம் தொடர்பாக, அத்திறந்த பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் என்று பொருளாகும்;

(iii) குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான பல் கலைக்கழகம் தொடர்பாக, குறிப்பிட்டவொரு நோக்கத்துக்கான அப்பல்கலைக்கழகம் என்று பொருளாகும்; அத்துடன்

(iv) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக, அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளர் என்று பொருளாகும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.